**செய்தி வெளியீடு எண் – 539.** **நாள் 30.08.2011**

## மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் ஆவின் அதிகாரிகளின் ஆய்வுக் கூட்டம்

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. என்.ஆர். சிவபதி அவர்கள் தலைமையில் 30.08.2011 அன்று காலை தலைமைச் செயலகத்தில் தமிழகத்தில் பால் கொள்முதலை அதிகரிக்க எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆவின் அதிகாரிகளின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை செயலர் திரு ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப. மற்றும் பால்வளத்துறை ஆணையர் /ஆவின் நிர்வாக இயக்குநர் திரு ம,ரா, மோகன், இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எண்ணப்படி, மீண்டும் ஒரு வெண்மை புரட்சிக்கு தயாராகும் வகையில், தமிழகத்தை பால் உற்பத்தியில் முன்னிலை மாநிலமாக திகழச்செய்ய தொடர்ந்து 3 மாதங்களாக ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி, அதனடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பால் கொள்முதல் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. தொடர் நடவடிக்கை காரணமாக பால் கொள்முதல் நாளொன்றுக்கு 20 இலட்சம் லிட்டர் என்ற அளவிலிருந்து தற்போது நாளொன்றுக்கு 24 இலட்சம் லிட்டர் என்ற அளவினை எட்டியுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆவின் அதிகாரிகள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு, பால் கொள்முதலை நாளொன்றுக்கு 27 இலட்சம் லிட்டராக அதிகரிக்க தக்க நடவடிக்கைகள் எடுக்குமாறு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், ஆவின் இணை நிர்வாக இயக்குநர் டாக்டர் எம். சுப்பையன். ஆவின் பொது மேலாளர் (பணிக்குழு) / துணை பால் ஆணையர் (பொறுப்பு) திரு. பி. குமாரவேல் பாண்டியன், அனைத்து மாவட்ட துணைப் பதிவாளர்கள் (பால்வளம்) மற்றும் ஆவின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**